இனிமையான குழந்தைகளே! உங்களுக்கு தந்தை ஆசிரியர் மற்றும் சத்குரு என மூவரும் ஒருவராக உள்ள தந்தை கிடைத்திருக்கிறார். ஆகையால் இப்போது அலைவதை நிறுத்தி விட்டு உண்மையிலும் உண்மையான வருமானத்தில் ஈடுபடுங்கள்.

கேள்வி: புதிய உலகத்தில் இராஜ்யம் செய்யத் தகுதி வாய்ந்தவர்களாக யார் ஆகின்றனர்?

பதில்: யார் சர்வசக்திவான் தந்தையிடமிருந்து சர்வ சக்திகளையும் பிராப்தியாக அடைபவர் களோ அவர்களே தகுதி வாய்ந்தவர்கள். குழந்தைகளாகிய நீங்கள் ஆன்மீக போராளிகள். தந்தையின் வழிப்படி தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டி ருக்கிறீர்கள். யோக பலத்தின் மூலம் நீங்கள் வெற்றியடையுங்கள் என தந்தை உங்களுக்கு உயர்ந்த வழி (ஸ்ரீமத்) கொடுக்கிறார்.

கேள்வி: எந்த குழந்தைகளுக்கு ஒவ்வொரு காலடி எடுத்து வைக்கும்போதும் வருமானம் சேமிப்பாகிறது?

பதில்: ஒவ்வொரு கர்மமும் ஸ்ரீமத்படி செய்யக்கூடியவர்களுக்கு ஒவ்வொரு காலடி எடுத்து வைக்கும் போதும் வருமானமே வருமானம் உள்ளது. நினைவில் இருப்பதும் சேவையே, சேவை செய்வதும் வருமானமே, யக்ஞ சேவை செய்வதும் வருமானமே.

பாடல்: ஓம் நம சிவாயா. . .

ஓம் சாந்தி. லௌகிக தந்தை ஒருவர் இருக்கிறார், மற்றவர் பரலௌகிக தந்தை என இப்போது குழந்தைகளுக்குத் தெரிந்துள்ளது. எப்போது துக்கம் ஏற்பட்டாலும் பரலௌகிக தாய் தந்தையை நினைவு செய்யப்படுகிறது. சிலர் பரமாத்மாவை மட்டும் நினைவு செய்கின்றனர், சிலர் நீயே தாயும் தந்தையும். . . என சொல்கின்றனர். சிலர் தாயை நினைவு செய்தாலும் செய்யா விட்டாலும் இறைத்தந்தை என சொல்லும்போது கண்டிப்பாக தாய் இருக்கவே செய்கிறார். தாய் இல்லாமல் குழந்தைகள் பிறக்கவும் முடியாது. ஆக, பரலௌகிக தாய் தந்தை இருக்கின்றனர், அவர்களை நினைவு செய்யப்படுகிறது. கண்டிப்பாக அவர்கள் கொஞ்சம் சுகம் கொடுத்துச் சென்றிருக்கின்றனர். பாரதம் சுகதாமமாக இருந்தது, சொர்க்கமாக இருந்தது என்பது நினைவுக்கு வருகிறது. லௌகிக தாய் தந்தையால் துக்கம் கிடைக்கிறது, எனவே தான் பரலௌகிக தந்தையை நினைவு செய்யப்படுகிறது, ஏனென்றால் அவரிடமிருந்து நிறைய சுகம் கிடைக் கிறது. நரகத்தில் இருக்கின்றனர், அதனால் மீண்டும் சொர்க்கத்தில் சென்று அளவற்ற சுகம் அடைய வேண்டும் என நினைவு செய்கின்றனர். ஜபம், தவம், பக்தி முதலானவை செய்யுங்கள் என குருமார்கள் சொல்கின்றனர். பாபாவோ அப்படிப்பட்ட வழியைத் தருவதில்லை. படிப்பதற் காக ஆசிரியரிடம் போ என லௌகிக தந்தையர் சொல்கின்றனர், பிறகு வானபிரஸ்த நிலையில் வரும்போது குருவிடம் போ என சொல்கின்றனர். பாபா உங்களை அப்படி எதுவும் சொல்வ தில்லை. லௌகிக மற்றும் பரலௌகிக தந்தையர்களிடையே எவ்வளவு வித்தியாசம் உள்ளது பாருங்கள். அவர் எவ்வளவு அலைய வைக்கிறார், இவரோ நான் உங்களுடைய தந்தையாகவும், ஆசிரியராகவும், குருவாகவும் இருக்கிறேன், பிறகு உங்களை எப்படி அலைய வைப்பேன்? இவரோ தாமே மூவருமாக இருக்கிறார், எனவே இவரை அனைவரும் நினைவு

செய்கின்றனர். மனிதர்கள் பக்தி மார்க்கத்தில் நிறைய அடி வாங்குகின்றனர் (ஏமாற்றம் அடைகின்றனர்). ஞானமார்க்கத் தில் அடி வாங்கும் விஷயமே கிடையாது. இந்த பக்தி மற்றும் ஞானம், துக்கம் மற்றும் சுகம் நிறைந்த விளையாட்டு உருவாக்கப்பட்டுள்ளது என்பதை குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார். எல்லைக்குட்பட்ட ஆசிரியர் எல்லைக்குட்பட்ட படிப்பை படிப்பிக்கிறார். எல்லைக் கப்பாற்பட்ட ஆசிரியராகிய நான் உங்களை எல்லைக்கப்பாற்பட்ட படிப்பை படிப்பிக்கிறேன். இது மரணலோகம் என நீங்கள் அறிவீர்கள். அவர்கள் படிப்பிக்கும் படிப்பு பழைய உலகிற் கானது மற்றும் நாம் படிப்பது புதிய உலகிற்காக. இந்த உலகம் நாளுக்கு நாள் பழையதாக ஆகிக்கொண்டு செல்கிறது, இதில் சுகம் ஒருபோதும் கிடைப்பதே இல்லை. சுகம் மற்றும் துக்கம் இந்த விளையாட்டு எப்படி உருவாகியுள்ளது என்பதை தந்தைதான் புரிய வைக்கிறார். தந்தை ஆத்மாக்களிடம் பேசுகிறார் - குழந்தைகளே, நீங்கள் தான் சுகத்தில் இருந்தீர்கள், பிறகு இராவணனின் பிரவேசம் ஆகும்போது மெது மெதுவாக துக்கம் தொடங்குகிறது. பிறகு கல்பத்தின் சங்கமத்தில் வந்து உங்களை சுகத்திற்கு அழைத்துச் செல்கிறேன். இப்போது உங்களின் புத்தியின் பூட்டு திறந்துள்ளது. இந்த அனைத்து விஷயங்களும் யதார்த்தமானவை (சரியானவை), தந்தையைத் தவிர யாரும் சொல்ல முடியாது என நீங்கள் அறிகிறீர்கள். பாபாதான் வந்து குழந்தைகளாகிய உங்களுக்கு சுகத்தைக் கொடுக்கிறார். ஆத்மா அழிவற்றது என இப்போது நீங்கள் அறிகிறீர்கள். இந்த சரீரம் மாற வேண்டியுள்ளது. பரமாத்மாவும் பரம (உயர்வான) ஆத்மாவாக இருக்கிறார், அவருடைய பெயர் சிவன், மனிதர்களாக இருக்கும் அனைவரையும் படைப்பவர் ஆவார். இங்குள்ள அனைவரும் எல்லைக்குட்பட்ட படைப்பவர்கள். பாபா எல்லைக்கப்பாற்பட்ட படைப்பவர்.

சத்யுகத்தில் தொடங்கி கலியுகம் வரை உங்களுக்கு கிடைத்திருக்கும் தந்தையர் எல்லைக்குட்பட்டவர்கள். சத்யுகத்தில் இருப்பது நீங்கள் அடைந்த பலன். அங்கே உங்களுக்கு ஒரு தந்தைக்கு ஒரு குழந்தை பிறக்கின்றது. கலியுகத்தில் ஒரு தந்தைக்கு 8-10 குழந்தைகள் இருப்பார்கள். பிரஜாபிதா பிரம்மாவுக்கு பாருங்கள், எவ்வளவு அளவற்ற குழந்தைகள் இருக் கின்றனர். ஆனால் இவர்கள் வாய்வழி வம்சாவளியினர். பி.கு. ஆகிறவர் கள், பின்னர் சத்யுகத் தில் சென்று தேவதைகள் ஆகின்றனர். அந்த லௌகிக தந்தை, ஆசிரியர், குரு அனைவரும் எல்லைக்குட்பட்ட விஷயங்களை சொல்கின்றனர், இந்த பரலௌகிக தந்தை எல்லைக்கப் பாற்பட்ட விஷயங்களை சொல்கிறார். புதிய விஷயங்களை தந்தை குழந்தைகளுக்கு முன்பாக அமர்ந்து சொல்கிறார். வீட்டில் இருந்தாலும் நீங்கள் இந்த புதிய படிப்பை பிராப்தி செய்து கொள்ளுங்கள். இது பகவானின் பாடசாலையாகும். இது ஸ்ரீமத் பகவத்கீதா பாடசாலை அல்லது ஞானத்தின் கீதம், இதனை நீங்கள் தான் கேட்கிறீர்கள். ஞானக்கடல் தந்தை தான் வந்து உங்களை ஞான-ஞானேஸ்வரியாக ஆக்குகிறார். மம்மாவை ஞான-ஞானேஸ்வரி என சொல்வோம். மனித இனத்தின் தலை முறை (பரம்பரை) தொடங்குகிறது. முதலில் இருப்பவர் பிரஜாபிதா பிரம்மா அதன் பின் ஜகத் அம்பா. முதன் முதலில் பிராமணரை படைக்கிறார், அதன் பின் தேவதைகள், க்ஷத்திரியர்கள், வைஸ்யர்கள் மற்றும் சூத்திரர்கள். ஜகத் அம்பா வினுடைய பதவியும் உயர்ந்ததாகும். ஆனால் அவரை யாருக்கும் தெரிவதில்லை. அளவற்ற படங்களை உருவாக்கி விட்டுள்ளனர். உண்மையில் 8-10 புஜங்கள் உள்ள மனிதர்கள் யாரும் கிடையாது. விஷ்ணுவிற்கு 4 புஜங்களை

காட்டுகின்றனர், ஆனால் 4 கால்களை காட்டுவ தில்லை. இவையனைத்தும் பொம்மைகளின் விளையாட்டாகும். கல்கத்தாவில் நிறைய தேவிகளை உருவாக்குகின்றனர், நிறைய செலவு செய்கின்றனர். உண்ண வைத்து, அருந்த வைத்து பின் தண்ணீரில் மூழ்கடித்து விடுகின்றனர், இவையனைத்தும் பக்தி மார்க்கமாகும். நாம் தான் தேவி தேவதை களாக இருந்தோம், பிறகு அசுரர்களாக ஆனோம், பிறகு தந்தை வந்து நம்மையே தேவி தேவதைகளாக ஆக்குகிறார். இப்போது இது பிரஷ்டாச்சாரி (கீழான) உலகமாக உள்ளது. அரசாங்கமும் கூட சொல்கிறது, ஆனால் நீங்கள் தூய்மையற்றவரா என நேரடியாக கேட்டால் ஒப்புக் கொள்வதில்லை. அட, நீங்கள் பதித பாவனரை கூப்பிடுகிறீர்கள், அனைவருமே கூப்பிடுகின்றனர் - ராஜா ராணி போல பிரஜைகள். சன்னியாசிகள் தூய்மை அடைகின்றனர், இதுவும் நாடகத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாரதத்தைப் போன்ற தூய்மை யான கண்டம் வேறு எதுவும் கிடையாது, ஆகையால் இது உண்மையான கண்டம் என சொல்லப்படுகிறது, பிறகு இதுவே பொய்யான கண்டமாக ஆகிறது. பாரதத்தை தூய்மையாக்க தந்தை பாரதத்தில் தான் வருகிறார். பாரதத்தில்தான் சிவனின் அவதாரம் ஏற்படுகிறது. சோம்நாத் கோவிலை எவ்வளவு பெரியதாக கட்டியுள்ளனர். பாரதவாசிகள்தான் கட்டியுள்ளனர், அவர் களை தந்தை அந்த அளவு செல்வந்தர்களாக ஆக்கியிருக்கிறார். தந்தை இங்கே பதிதமான (தூய்மையற்ற) உலகில் பதிதமான (தூய்மையற்ற) சரீரத்தில் தூய்மையாக்கு வதற்காக வருகிறார். ஆனால் பல குழந்தைகள் புரிந்து கொள்வதே இல்லை, ஏனென்றால் சாதாரணமாக இருக்கிறார். பிறகு பக்தி மார்க்கத்தில் உங்களிடம் நிறைய பணம் இருக்கும் போது வைர வைடூரியங்களால் ஆன கோவில்களை கட்டுகிறீர்கள். சத்யுகத்தில் கணக்கற்ற செல்வம் இருக்கும். அங்கே பணத்தை எண்ணுவதே இல்லை, அளவற்ற செல்வம் இருக்கும். ஆக தந்தை யாரை செல்வந்தர்காளாக ஆக்குகின்றாரோ அவர்கள் எவ்வளவு பெரிய நினைவுச் சின்னத்தை உருவாக்குகின்றனர். முதலில் லட்சுமி நாராயணராக இருந்தவர்கள்தான் 84 பிறவிகளை எடுக்கின்றனர். அவர்கள் முதலாவதாக கீழே இறங்குகின்றனர், பக்தர்களாக ஆகின்றனர். யார் அவர்களை உருவாக்கினாரோ அவருடைய நினைவுச் சின்னத்தை உருவாக்குகின்றனர். லட்சுமி நாராயணர் விகர்மாஜீத் (பாவ கர்மங்களை வென்றவர்களாக) ஆனார்கள், பிறகு அவர்களே விகர்மம் செய்பவர்களாக ஆகின்றனர். யார் அவர்களை முதலில் அப்படி (உயர்வாக) உருவாக்கினாரோ அவரை பூஜை செய்வது அவர்களுடைய கடமையா கிறது. சோமநாத் கோவில் எவ்வளவு முதல் தரமாக இருந்தது. அதனை கொள்ளை அடித்தவர் கள் இறந்து விட்டனர். மற்றபடி அடையாளங்கள் மட்டும் இருக்கின்றன. நாம் தான் பூஜைக்குரியவர்களாக ஆகிக் கொண்டிருக்கிறோம், பிறகு பூஜாரி ஆகி கோவில்களை கட்ட ஆரம்பிப்போம் என இப்போது தெரிந்திருக்கிறீர்கள். ஒரே ஒரு கோவில் மட்டும் இருக்காது, ராஜாக்கள் தம் வீட்டில் (அரண்மனையில்) கூட கோவில்களை கட்டுகின்றனர், வீட்டில் குருத்து வாரம் கட்டுகின்றனர். முதலில் யாராவது குருத்துவாரத்தை உருவாக்கி இருப்பார் பிறகு பக்தி மார்க்கம் ஆரம்பமாகி விடுகிறது. முதலில் கலப்படமற்ற பக்தி செய் கின்றனர், பிறகு கலப்பட மான பக்தி செய்கின்றனர். இன்றைக்கு மனிதர்கள் தம்மைத் தாமே பூஜை செய்விக் கின்றனர். அது பூதங்களின் பூஜை எனப்படுகிறது. பூதங்களின் பூஜை கூட உலகத்தில் நிறைய நடக்கிறது. கைக்கு வந்தபடி சித்திரங்களை உருவாக்கிக் கொண்டே போகின்றனர். பக்தி மார்க்கம் அல்லவா. இப்போது உங்களுடைய புத்தியில் முழு ஞானம் உள்ளது. பாபா

சங்கம யுகத்தில் ஒரே ஒரு முறை வந்து ஞானத்தைக் கொடுக்கிறார். சாஸ்திரங்களில் பல அவதாரங்கள் என எழுதி விட்டனர். அவதாரம் ஒன்று தான் ஏற்படுகிறது. ஆத்மா கூட அவதரிக்கிறது. ஆனால் மனிதர்களை அவதாரம் என சொல்வதில்லை. யாரை முழு உலகமும் அழைக்கிறதோ அந்த ஒரே ஒரு நிராகார தந்தை அவதரிக்கின்றார். தந்தை ஒரே ஒருவர்தான், அவர் பரமதாமத்தில் இருக்கிறார். ஆக, தாய் கூட வேண்டும். தாயும் பரமதாமத்தில் இருப்பாரா என்ன? இல்லை. தாய் தந்தை என்ற கேள்வி இங்கேதான் எழுகிறது. தந்தை இங்கே வந்து படைக்க வேண்டி யிருக்கிறது, ஆகையால் எல்லைக்கப்பாற்பட்ட தந்தையை நினைவு செய்கின்றனர். பாபா வந்து சொர்க்கத்தைப் படையுங்கள், அவரைத்தான் சொர்க்கத்தின் இறைத் தந்தை என சொல்லப் படுகிறது. இப்போது எவ்வளவு துக்கம், சண்டை சச்சரவுகள் ஏற்படுகிறது. ஆகையால் இறைத் தந்தையே இரக்கம் காட்டுங்கள், ஓ பதித பாவனரே! வாருங்கள் என அழைக் கின்றனர். நாங்கள் அனைவரும் துக்கமாக தூய்மையற்றவர்களாக இருக்கிறோம். ஓ பாபா! மீண்டும் வந்து சொர்க்கம், சிரேஷ்டாச்சாரி (உயர்ந்தவர்களாக) ஆக்குங்கள் என அழைக் கின்றனர். நீங்கள் அனைவரும் கீழானவர்களாக இருந்தீர்கள், இப்போது உயர்ந்தவர்களாக ஆகிக் கொண்டிருக் கிறீர்கள். கீழானவர்களை உயர்ந்தவர்களாக ஆக்குவது ஒரே ஒரு தந்தையின் காரியம் ஆகும். அனைத்து குழந்தைகளும் இப்போது அனாதை ஆகி விட்டனர், அவர்களை தந்தையுடையவர் களாக, உயர்ந்தவர்களாக ஆக்க வேண்டும் என்று உலகத்தின் இறைத் தந்தைக்குத் தெரியும்.. 10-20 மனிதர்களை மட்டும் உயர்ந்தவர்களாக ஆக்குவதில்லை. பாரதம் உயர்ந்ததாக இருந்த போது தெய்வீக அரசாங்கம் இருந்தது. இப்போது இராம இராஜ்யத்தில் 5 விகாரங்கள் பிரவேச மாகி விட்டது. பகவானுடைய மகா வாக்கியம் - ஒரே ஒரு நிராகாரமானவரைத்தான் பகவான் என சொல்லப்படுகிறது. ஒரு கீதையை தவறாக்கி விட்டதால் அனைத்து சாஸ்திரங்ளும் தவறாகி விடுகிறது. பாபா சொல்கிறார் - நான் உங்களுக்கு இராஜயோகத்தைக் கற்றுக் கொடுத்தபோது பாரதம் சொர்க்கமாக ஆனது. கீதையை நான்தான் சொல்லியிருந்தேன். கிருஷ்ணரை முழு உலகத்தின் பகவான் என சொல்ல முடியாது. ஆத்மாக்களாகிய நம்முடைய தந்தை நிராகார பகவான் ஆவார். கீதையின் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் என எப்படி சொன்னார்கள்? வியாசர் எழுதியதாக சொல்கின்றனர். ஆனால் பாபா சொல்கிறார் - நான்தான் புதிய உலகத்தை படைப்பவர், ஞானக்கடல், பதித பாவனர் ஆவேன். ஓ பதித பாவன பரமாத்மாவே ! வாருங்கள், வந்து என்னை தூய்மை யாக்குங்கள் என என்னைத்தான் அனைத்து ஆத்மாக்களும் அழைக்கின்றனர். நிராகார தந்தைதான் பிரம்மாவின் மூலம் தூய்மையான உலகத்தைப் படைக்கிறார், தூய்மையற்ற உலகத்தை வினாசம் செய்விக்கிறார். யார் தூய்மையடை கின்றனரோ அவர்கள் இராஜ்ய பாக்கியத்தை அடைகின்றனர். நீங்கள் சிவசக்தி சேனை, ஜகதம்பா கருவியாக இருக்கிறார். அவர் கூட இராவணனை வெற்றி அடைவதற்காக சிவபாபா வுடன் புத்தியின் தொடர்பை ஈடுபடுத்தி சக்தி பெற்றுக் கொண்டிருக்கிறார். பாரதத்தில் தான் இராவண இராஜ்யம் இருக்கிறது, பாரதத்தில்தான் இராவணனை எரிக்கின்றனர். பாரதம் உயர்ந்ததாக இருந்தது, இங்கே கலியுகத்தில் பாரதம் தாழ்ந்து விட்டது. இதுவும் விளையாட்டாகும். கீழான நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு மற்றும் உயர்ந்த நிலை யிலிருந்து தாழ்ந்த நிலைக்கு வருகிறது. இந்த சக்கரம் எப்படி சுற்றுகிறது என்பது மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய

விஷயமாகும்.

நாம் அனைத்தையும் செய்தபடியே தந்தையின் ஸ்ரீமத்படி பாரதத்தை சொர்க்கமாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் ஆன்மீக போர் வீரர்கள், யோகபலம் நிறைந்தவர்கள். சர்வ சக்திவான் தந்தையின் வழிப்படி தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக் கிறீர்கள். யோக பலத்தின் மூலம் நீங்கள் வெற்றி அடைய முடியும் என தந்தை வழி காட்டுகிறார். யோகத்தில் இருப்பதும் வருமானம், யக்ஞசேவை செய்வதும் வருமானம். மற்ற அனைவரும் மனிதர்களின் வழிப்படி செல்கிறார்கள், நீங்கள் சர்வசக்திவான் தந்தையின் வழிப்படி சென்று கொண்டிருக்கிறீர்கள். உங்களைத் தவிர வேறு யாரும் உலகத்தின் மீது வெற்றி அடைய முடியாது. உலகத்தின் மீது இராஜ்யம் செய்யும் பாகம் நாடகத்தில் அவர் களுக்கு இல்லை. எவ்வளவு பெரியதிலும் பெரிய மற்றும் சாதாரண விஷயங்கள் ஆகும். கண்காட்சி மூலம் இதுவரை அந்த அளவு புரிந்து கொள்வதில்லை, ஆனாலும் பிரஜைகள் வெளிப்படுகின்றனர். நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. ஒவ்வொரு கர்மத்தையும் ஸ்ரீமத்படி செய்ய வேண்டும். நினைவில் இருந்து யக்ஞ சேவை செய்து தனது வருமானத்தை சேமிக்க வேண்டும்.

2. அலைந்து திரிவதை நிறுத்தி விட்டு எதிர்கால புதிய உலகத்திற்கான படிப்பை படிக்க வேண்டும். ஞானத்தை தாரணை செய்து ஞான-ஞானேஸ்வரன், ஞான-ஞானேஸ்வரி ஆக வேண்டும்.

வரதானம் : அமிருதவேளையில் தனது நெற்றியின் மீது வெற்றி திலகத்தை வைக்கக் கூடிய விடக் கூடிய சுயராஜ்ய அதிகாரியி-ருந்து விஷ்வ அதிகாரி ஆகுக.

தினமும் அமிருத வேளை தனது நெற்றியின் மீது வெற்றி திலகம் அதாவது நினைவின் திலகம் (ஸ்மிருதி) இட்டுக் கொள்ளுங்கள். பக்தியின் அடையாளம் திலகம் ஆகும். மேலும் சுமங்கல தன்மையின் அடையாளம் கூட திலகம் ஆகும். இராஜ்யத்தை பெறுவதற்கான அடையாளம் கூட இராஜ திலகம் ஆகும். எப்பொழுதுமே ஏதாவது சுப காரியத்தில் வெற்றி அடைவதற்காக செல்கிறார்கள் என்றால் செல்வதற்கு முன்னால் திலகம் இடு கிறார்கள். உங்கள் அனை வருக்கும் கூட தந்தையுடன் கூட இருக்கும் சுமங்கலத் தன்மை இருக்கும். எனவே அவினாஷி திலகம் ஆகும். இப்பொழுது சுயராஜ்யத்தின் திலகம் அணிந்தவர்கள் ஆனீர்கள் என்றால் வருங் காலத்தில் உலக இராஜ்யத்தின் திலகம் கிடைத்து விடும்.

சுலோகன்: ஞானம், குணம் மற்றும் சக்திகளின் தானம் செய்வது தான் மகாதானம் ஆகும்.

விலை மதிப்பிட முடியாத ஞான ரத்தினங்கள் (தாதிகளின் பழைய டைரியிலிருந்து)

எப்பொழுது எந்தவொரு தெய்வீக குழந்தையும் நான் - உடல், மனம், பொருள் உற்பட யக்ஞத்தில் ஸ்வாஹா அதாவது அர்ப்பண மயம் ஆகி விட்டேன் என்று நினைக் கிறாரோ, அச்சமயத்தில் அவ்வாறு அர்ப்பணம் ஆகி இருக்கும் குழந்தையிடம் எதுவுமே தன்னுடையது என்ற தன்மை இருப்பதிலை. எல்லாமே யக்ஞத்தின் சேவையில் வந்து விடுகிறது. அதில் கூட உடல் மற்றும் மனமோ நெருங்கி இருக்கிறது. பணம் பிறகும் தனி யானது ஆகும். எனவே உடல் மற்றும் மனதை யக்ஞத்தின் சேவையில் ஈடுபடுத்துவது தான் தூய்மையான சேவை ஆகும். உடல், மனம், பொருள் யக்ஞத்தில் அதாவது இறைவனுக்காக என்று கூறுகிறார்கள் என்றால் பிறகு தனக்கு என்று எதுவும் இருக்க முடியாது. மேலும் மனம் எந்தவொரு மாயையின் அசுத்த சங்கல்பத்தின் பக்கம் ஓட முடியாது. ஏனெனில் இறைவனுக்கு அர்ப்பணம் செய்து விட்டார்கள் என்றால் இறைவன் இருப்பதே தூய்மையானவராக, அமைதியானவராக. எனவே அவர் மனம் என்ற குதிரையை எந்தவொரு அசுத்தமான எண்ணத்தின் பக்கம் ஓட்டாமல் தனது வசப்படுத்தி வைத்திருப்பார். மாயையின் கையில் கொடுத்து விட்டார் என்றால் மாயை (வெரைட்டி) பல விதமாக இருக்கும் காரணத்தால் பல்வேறு விதத்தில் அங்குசம் பாய்ச்சுகிறது. பிறகு அநேகவிதமான விகல்பங்கள் (தீய எண்ணங்கள்) வந்து மனதின் மீது படையெடுக்கிறது. எனவே இன்னுமே எனக்குள் எனது என்ற தன்மையின் சிறிதளவு கூட இருக்கிறது என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் யக்ஞத்தின் பொருட்டு ஸ்வாஹா ஆகி விட்டது என்றால் பின் தூய்மையாக ஆகி விட்டது. பிறகு யக்ஞத்தினுடைய சேவையை தவிர வேறு எந்த பக்கமும் உடல் மற்றும் பொருள் வேலை செய்ய முடியாது. எனவே இந்த மிகவுமே ஆழமான மற்றும் துல்லியமான இரகசியத்தை புரிந்து கொண்டு தங்கள் மீது மிகவுமே கவனம் வைத்து எச்சரிக்கையுடன் நடக்க வேண்டும். நல்லது. ஓம் சாந்தி.